தொகுதி-ருரு
பகுதி-௰௧

Vol. 55
No. 11

செந்தமிழ்

திருவள்ளுவர்
ஆண்டு 1991
விகாரி-மாசி
FEBRUARY-1960

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

உள்ளுறை

1. இருவேறு உலகத்தியற்கை
புலவர் வெ. சி. சீனிவாசன் 317
2. தண்டனே !
புலவர் வித்துவான். மு. உலகநாதன் 323
3. சனி நீராடு
புலவர். இரா. இளங்குமரன் 329
4. அலேமகள்
பதிகன் 332
5. நும் நீயிர்
ஆ. சிவலிங்கனுர் 333
6. கண்டதும் காதலா?
வித்துவான். வீ. ப. கா. சுந்தரம். M. A. 336
7. ஒளி நெறி ஆண்டு
மு. இராமலிங்கனுர். பி. ஏ., 342
8. சரம கவி மாலிகை
மின்னு நூருத்தீன் 346

"செந்தமிழ்" ஆசிரியர் குழு

1. நிர்வாக ஆசிரியர். தமிழவேள். திரு. பி. டி. இராசன். B. A., (Bar-at-Law) M. L C.

2. திரு. சித்தாந்தகலாநிதி. பேராசிரியர். ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை. தியாகராசர் கல்லூரி, மதுரை.

3. டாக்டர். திரு. மா. இராசமாணிக்கனுர் M. A. L. T. M. O. L. Ph. D; சென்னே.

4. திரு. பேராசிரியர், பி, சோமுமுத்து. M. A. B. D.

5. திரு. முகமது சுல்தான் M. A. B. L. வழக்குரைஞர், மதுரை.

6. திரு வி. சண்முகசுந்தரம் M. A. B. L. செயலாளர், மதுரைத் தமிழ்ச்சங்கம். அரசாங்க வழக்குரைஞர், மதுரை.

7. திரு. கி. பழநியப்பன், துணைத்தலேவர். மதுரைத் திருவள்ளுவர் கழகம்

8. வித்துவான். திரு. கு. மா. திருநாவுக்கரசு, பொறுப்பாசிரியர், தமிழ்விரிவுரையாளர், செந்தமிழ்க்கல்லூரி, மதுரை.

3582

உ
கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி. ருரு Vol. 55	திருவள்ளுவர் ஆண்டு 1991 விகாரி—மாசி 1960—February	பகுதி. மக No. 11.

இருவேறு உலகத்தியற்கை

புலவர். வெ. சி. சீனிவாசன்
தமிழ் விரிவுரையாளர், செந்தமிழ்க்கல்லூரி, மதுரை.

(308-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

"இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு" —குறள்

அறிவுள்ளவன் செல்வஞ் சேர்க்கவும், பயன் கொள்ளவும் திறம் படைத்திருப்பான்; அறிவில்லாதவன் அதனை ஆக்கவும் காக்கவும் இயலாதவனாக இருப்பான்; இவ்வாறு தானே உலக நியதி அமைய வேண்டும். அறிஞன் வறியனாகவும் மற்றையவன் செல்வனாகவும் காணப்படுகின்றனர். அறிவைத் தேடத் தேடச் செல்வம் தேய்கிறது; செல்வம் பெருகப் பெருக அறிவு குறைகிறது. (இங்கு அறிவென்பது மெய்யறிவைக் குறிக்கும்; விஞ்ஞான அறிவன்று) எனவே அறிவைத் தேட ஒருவழி—ஊழ் உள்ளது. செல்வத்தைத் தேட ஒரு வழி—ஊழ் உள்ளது. பரிமேலழகர் தரும் விளக்கம் இதுவே.

நம்நாட்டில் முடியுடை மூவேந்தரும் வாழ்ந்தனர்; கடையெழு வள்ளல்களும் வாழ்ந்தனர். மூவேந்தரோ' பரந்த

விரிந்த நாடு கொண்டாண்டனர்; ஆனால் வள்ளல்களோ சில பல ஊர்களையும், ஒரு சில மலைகளையும் பெற்றிருந்தனர். செல்வத்திலே மூவேந்தரை 'மலை' என்றால் வள்ளல்களைப் பெரும் 'பள்ளம்' என்றே நாம் மதிக்க முடியும். வறியார்க் கொன்றீவதே ஈகை-என வந்தவர்க் கெல்லாம் வாரி வழங்கி யவர் வள்ளல்கள். 'ஈதல் இசைபட வாழ்தல்' என்பதை வாழ்வின் வழியாக அமைத்துக் கொண்டவர் வள்ளல்கள். எல்லோர்க்கும் எல்லாவற்றையும் கொடுத்து விட்டு இல்லாதவரானவர் வள்ளல்கள்; ஆனால் மக்கள் உள்ளங்களில் உள்ளவரானார்கள்.

மன்னர்கள், தங்கள் மண்ணை வளர்ப்பதிலேயே கண் வைத்திருந்தனர். மண்ணை வளர்க்க மாபெரும் படைதேவை' படை வளர்க்கப் பொருள் இன்றியமையாதது. வறியவர்க் கெல்லாம் வாரி வழங்கிக் கொண்டிருந்தால் பொருள் சேராது. எனவே வள்ளல்கள் போல வாரி வழங்க மன்னர் களால் இயலவில்லை. வள்ளல்கள் அளவு மொழியையும் கலையையும் வளர்க்க முடியுடையவர்களால் முடியவில்லை. ஆக, வள்ளல்கள் தெள்ளியோர் ஆகும்நெறியில் சென்றனர். மன்னர்கள் திருசேர்க்கும் வழியில் ஒழுகினார்கள்.

முடியுடை மூவேந்தர்கள் இவ்வுலக முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆளவேண்டும் என்று ஆசை கொண்டது இயற்கையே. அதை வெற்றி பெற முடிப்பதற்குக் கொல்லுங் களிற்றுப்படையையும், கதியோடு செல்லுங்குதிரைப்படையையும், நெடுங்கொடிய தேர்ப்படையையும், நெஞ்சுடைய மறவர் படையையும் பெருக்கியதில் தவறு ஒன்றுமில்லை. தமிழக மன்னருள் தலையாயவன் தலையாலங்கானத்துச்செரு வென்றநெடுஞ்செழியன். அவன் குகை வாழ் புலியின் குணம் கொண்டவன்; இளம் வயதிலேயே எழுவரது நல் வலத்தை முறுக்கித் தன் தோள் நலத்தைக் காட்டியவன்.

அவன் முன்னோர்கள் இந்நாவலந்தீவைத் தம் காவலுக் குள் அடக்கி ஆண்டனர். இதனை நயமான முறையில் குடபுல வியனார் எடுத்தோதினார்.

"முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇப்
பரந்து பட்ட வியன் ஞாலம்
தாளிற் றந்து தம்புகழ் நிறீஇ
யொருதா மாகிய உரவோர் உம்பல்" —புறம் 18

இவ்வாறு பீடும் பெருமையும் பெருந்திய குடியில் பிறந்தவன் நமது நெடுஞ்செழியன். இவன் ஈடும் எடுப்பும் இன்றி விளங்கியதில் வியப்புண்டோ! அவன் உள்ளம் அறங்காக்கும் செங்கோலை அவாவியது. சேவை செய்வதே சிறந்த செல்வம் எனச்சிந்தித்தான் அச்செம்மல். குடிமக்கள் "செழியன் செங்கோலன்' எனக் கூறிடும் சொற்களைத் தேனெனச் சுவைத்துத் தேக்கிவைத்தான் தன் உள்ளத்தில். நோயும் வறுமையும் நாட்டில் நுழையாதிருக்க அவன் விழைவு கொண்டான். அவன் குடை நிழல் குடிகட்குத் துயரமாம் வெயில் படாது மறைப்பதைத் தன் கடமையாகக் கருதினன். மாங்குடி மருதன் முதலிய மாபெருங் கவிஞர் பாடுவதைப் பெறற்கரிய பேறெனப் பெருமிதங் கொண்டான் அவன்.

கவிதை புனைவதில் கரைகண்டவன் அக்காவலன். மொழியின் மூலமறிந்தவனாகவும், கலையில் வல்லவனாகவும் அவன் திகழ்ந்தான். சுருங்கச் சொன்னால் அவன் கவியரசனாகவும், புவியரசனாகவும் நிலவினன். ஆகையினாலேயே அவன் உள்ளத்தில் பொங்கியெழுந்த நலமிகு கருத்துக்களைத் தெள்ளியதொரு கவிதையிலே அவனே தந்தான். அது நமது உள்ளத்தைத் தொட்டு உணர்ச்சியைத் தட்டி எழுப்புவதைப் பாருங்கள்.

" ... ... பொருந்திய
என்னிழல் வாழ்நர் சென்னிழல் காணாது
கொடியனெம் மிறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலே னாகுக;
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைக வென்னிலவரை" —புறம் 72.

நெடுஞ்செழியனது நேர்மைமிகு நெஞ்சம் பளிங்கைப் போல் நமக்கு விளங்குகிறது. அவன் நல்லவனுக வாழ்ந் தாலும், கவிதை புனைவதிலே வல்லவனுக வாழ்ந்தாலும் இவ்வுலகில்தானே வாழ்ந்தான். இவ்வுலகின் இயற்கை நெறியில்தானே அவன் நடந்தாக வேண்டும். நாடுகாக்கும் பொறுப்பு அவனுக்கு உண்டு. முடியுடை மன்னரில் மற்ற இருவரும் நாடுபெருக்கும் பணியிலே நாட்டங்கொண்டிருந் தனர். நாட்டம் மட்டும் இருந்திருப்பின் பரவாயில்லை. நல்லதொரு சமயத்தையும் எதிர்பார்த்தனர். செழியன் இளையனுக இருந்தான் அன்றே! 'இளைதாக முண்மரங் கொல்க' என எண்ணி இவன்நாடுகொள்ளத் துணிந் தனர் அவ்விருவரும். துணிந்ததோடு மட்டுமின்றித் துணையாக ஐந்துவேளிரையும் அழைத்துக்கொண்டனர்.

செழியன் இளையன் ஆகையால் எளிதில் வெல்லலாம் என்றும் உள்ளங்கொண்டனர். சிறிய முயற்சியால் பெரிய நாட்டைக் கொள்ளைகொள்ளலாம் என வீணைசைகொண்ட னர். அவர்கட்கு மகிழ்ச்சி பொங்கியது; உவகையின் போதை தலைக்கேறியவுடன் உடன்பாடில்லாச் சொற்களைப் புகன்றனர்.

> ... ... நம்மிற்
> பொருநனும் இளையன் கொண்டியும் பெரிதென
> எள்ளிவந்த வம்ப மன்னர்!' — புறம் 78:

'போரால்அழிவே நேரும், ஆக்கம் வாராது' என்பதைச் செழியன் செம்மையாக அறிவான். இருப்பினும் தன்னுடு காக்கும் கடமையைச் செய்தே தீரவேண்டும் அவன். புலி யென விளங்கிய போர் மறவன் ஆயிற்றே அவன். எனவே செழியன் போரில் செழிப்பான வீரங்காட்டினன். தலையா லங்கானத்திலே தலைகளை உருட்டினன். நம்மறவன் அம் மன்னர்களைக் களத்திலே விண்ணுலகுக்கு அனுப்பினு னில்லை; அவர்களது தலைநகர்வரை துரத்திச் சென்றன். அவர்கள் காதற்கிழத்தியர் காணுமாறு, கோழைகளுக்கு

மாலையிட்டோமே என நாணுமாறு, நாணிச் சாகுமாறு அங்குக் கொன்றான். இதனை இடைக்குன்றூர் கிழார் இனிய முறையில் எடுத்தோதுகிறார்.

> "புல்லென் கண்ணர் புறத்திற் பெயர
> ஈண்டவர் அடுதலும் ஒல்லான் ஆண்டவர்
> மாணிழை மகளிர் நாணினர் கழியத்
> தந்தை தம்மூர் ஆங்கண்
> தெண்கிணை கறங்கச் சென்றாண்டட்டனனே" — புறம் 78

நெடுஞ்செழியன் செய்த கன்னிப்போர் இத்தலையாலங் கானத்துப்போரே. இது பிறர் வலிய வந்த போர்தான்; அவன் வலியச் சென்று செய்த போர் அன்று. தன்னாடு காக்கவே இப்போரைச் செய்தான். தன்னோடு போர் செய்யப் படையெடுப்பாரும், அடுப்பாரும் இல்லா அளவு நேர் நிகரில்லாப் போர் மறவன் ஆனவன். காலம் சுழன்றது. இம் மாநிலத்தில் பிறர் மண்ணைக்கொள்ள எண்ணுவோர் பலரிருப்பதை அவனறிந்தான். ஆண்டுகள் உருண்டோடவோட அவன் தூய உள்ளமும் மாறியது. குடிகளின் துன்பக் கண்ணீரைத் துடைக்க விரும்பிய அவன் நல்ல நெஞ்சமும் மாய்ந்தது. தன்னாடு தாக்கிய மன்னர்களின் மண்ணை ஏன் தானும் கொள்ளக்கூடாது? அவனும் ஆசைகொண்டான். ஆம், நாடுகாக்கத் தொடங்கிய போரை நாடு ஆக்குவதற்காகவும் தொடர்ந்தான்.

திருசேர்க்கும் நெறியில் சென்றால் தெள்ளியனாக இருக்க இயலாதல்லவா! பேரரசு நிறுவுவதில் தன் பேரார்வத்தைத் திருப்பி விட்ட நம்செழியன், தனது கலைமிகு தெள்ளியஉள்ளத்தை மாற்றுப்பாதையில் திருப்பிவிட்டதில் வியப்பொன்றுமில்லை. எனவே, பேரரசு நிறுவப் போர்பல செய்தான். செய்த போர்களிலெல்லாம் சொற்களில் பெய்ய இயலா வெற்றியும் பெற்றான். அவன் பெற்ற வெற்றியைப் பெருமை தோன்றப் பேசினர் புலவர்; புலமை நயத்தையும் தம் பாடலில் தேக்கி வைத்தனர்.

புலவர்களின் சொல் வழங்குங் கலைதான் எத்துணை மேன்மையானது! செழியன் ஆணைக்கடங்காத மன்னர் ஆண்டு (விண்ணுலகில்) வாழ்கின்றனராம்; தவம் பல செய்தவர்களாம்; செழியனோடு போர்செய்ய ஆற்றாராயினர் அவன் பகைவர்; இருப்பினும் நம் மன்னவன் அவர் இழிவைப் போக்கிப் பொன்னுலக வாழ்வை அளித்தானும். புலவர் நயம்பல பெய்து இப்பாவை அமைத்தார் என்பதில் ஐயமில்லை; அருவருப்பான கோரச்செயலை மறைத்து அருமையாக நம்முள்ளத்தைக் கொள்ளைகொள்ளச் செய்தார் பாவலர் என்பதும் உண்மைதான். ஆனால் செழியன் பேரரசு அமைக்க மன்னர் பலரைக் கொன்றான் என்பதை நாம் மறக்கலாகாது. இளமையில் அவனுக்கிருந்த மனத் தெளிவு களங்கமடைந்தது என்பதை நாம் ஊகித்தறிய வேண்டும்,

''தோற்றோர் மன்ற நின்பகைவர், நின்னொடு
மாற்றார் என்னும் பெயர் பெற்று
ஆற்றா ராயினும் ஆண்டுவாழ் வோரே'' — புறம் 26.

நெடுஞ்செழியன் முடிமன்னர் பலரைப் பல களங்களிலே எதிர்த்தான், இறுதியில் வென்றான். அந்த இணையற்ற இறுதிப்போரிலே களவேள்வியுஞ் செய்தான். முடித் தலைகளை அடுப்பாகவும், தோல்களைத் துடுப்பாகவும், குருதி நீரை உலைநீராகவுங்கொண்டு வேள்வி உணவை ஆக்கினான்; வீரர் வயிறார உண்டனர்; மறவர் விருப்பமொடு மாந்தினர்.

''முடித்தலை யடுப்பாகப்
புனற்குருதி யுலைக்கொளீஇத்
தொடித்தோட் டுடுப்பிற் றுழந்த வல்சியின்
அடுகளம் வேட்ட வடுபோர்ச் செழிய'' — புறம் 26.

(தொடரும்)

தண்டனை!

(புலவர். வித்துவான். மு. உலகநாதன்)

[304-ஆம் பக்கத் தொடர்ச்சி]

சேரன்: உண்மை இதுவா? உணர்ந்தேன் புலவரே!
எண்ணிய சொல்வேன் இருப்பினும் அமைச்சில்
"எம்மோ ரன்ன வேந்தற் குற்ற
செம்மையின் இகந்தசொல் செவிப்புலம் படாமுன்"
அப்பழி நீக்க ஆருயிர் நீத்தும்
இப்புவிப் புகழ்படல் எம்கடன் ஆனது!
"மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்பம் அல்லது தொழுதக வில்லை"!
இல்லையா புலவரே?

வேண்மாள்: எவரிலை என்பார்?
அரசே! நம்மலை அடைந்தஇப் பெண்ணணாம்
பெருமையாய் வணங்கிப் போற்றிப் புகழ்ந்திட
வேண்டுமென் றிங்கே விருப்பம் கொண்டேன்.
வேண்டுவ செய்வீரோ?

அமைச்சர்: வில்தலைக் கொண்ட
வியன்பேர் இமய வெற்பினை அடைந்தே
கற்கால் கொண்டு கண்ணகி இவளைக்
கடவுள் ஆக்குவோம்! காவலன் ஆணை
இடத்தான் வேண்டும். இட்டால் முடித்தோம்!
(வேண்மாள் மன்னன் முகத்தை நோக்க)

சேரன்: செயல்படும் அமைச்சரே! தடையெதும் வந்தால்
உடைத்ததை எறிவீர்! உடந்தை யான
கடைநிலை மாந்தரைக் கழுகும் காகமும்
புடைக்கத் தின்னப் போர்ப்பறை கொட்டுவீர்!
படைகள் செலட்டும். பாவைக் கிங்கே
ஓர்பெரும் கோயில் உடனே கட்டிட

நீர்தான் பொறுப்பு! நீங்குமின் இவ்விடம்
முடித்தேன் என்று முன்னால் வருக!
அட! இனும் நிற்பதோ? ஆணை தந்தோம்!

அமைச்சர்: ஆணை! மன்னு! ஆணை ஏற்றோம்!

2

[இமயப் பகுதியில் கனகனும் விசயனும் மற்ற மன்னர்களுடன் விருந்துண்டு மகிழ்ந்து இருத்தல்]

விசயன்: ஆடுக மாதே! ஆடுக நன்றாய்!
பாடுக பாட்டை! பாட்டுடன் ஆடுக.
பாட்டிலா ஆடல் தன்னைப் பார்க்கின்
கோட்டையே இல்லாக் கொற்றவன் அமைச்சினைப்
போலுள பெண்ணே!

கனகன்: (மதுமயக்கத்துடன்) புலமை! புலமை!
வேலினைக் கையில் தாங்கிய இல்லை!
இருப்பினும் புலமை! என்னே உவமை!
விருந்தின் சுவையில் விசயரே உமக்குக்
கவிதையும் வருமெனக் கண்டேன் இந்நாள்!

விசயன்: புவியினை ஆள்பவன் புலமை இன்றிப்
புவிதனை ஆண்டால் போற்றுமோ உலகம்?
கவிதையின் சுவைஞரே! காணும்! காணும்!
ஆடலும் பாடலும் அப்புறம் நாமே
தேடினும் கிட்டா! தேன்மழை கொட்டின்
ஆகா! எத்துணை அளவில் இன்பமோ
ஆகா அதனின் ஆடல் ஆடிடும்
பாவை அந்தப் பனிமொழி பாடலில்
தாவிடும் மனத்தைத் தடுத்திட என்னால்
கூடவும் இல்லை!

கனகன்: கோதையே! ஏய்! ஏய்!
ஓடிவா! இங்கே உன்கையால் மதுவை
நண்பருக் கூற்று! நல்லவர் அன்னவர்!
கண்ணுன தாட்டம் காவலன் அவரைப்
பித்தனாய் ஆக்கின! பேதையே! ஊற்றுக!
எத்தனை கோப்பைகள் இதுபோல் குடிக்கினும்
உன்கையால் குடித்தால் உலகமே அடிமை!

விசயன்: என்ன நண்பரே! இப்படிப் பொய்யை
அள்ளிக் கொட்டுவீர்! அளந்து பேசும்!
எல்லையிந் நாட்டை எவனோ தமிழனும்
வந்தவன் அடக்கி வாளினைக் காட்டி
எந்தையர் பனிமலை இமய வெற்பில்
புலி,வில், கயலினைப் பொறித்தன னாமே?

கனகன்: சொல்லிது எவன்சொல்? சொன்னவன் எங்கே?
வலியில் ஆனாரா? வடக்கினை ஆள்பவர்?
எலியென நினைப்பா? இங்குளோர் தம்மை!
இம்மலை தன்னில் ஏற்றினன் கொடியெனில்
எம்மைப் போல இந்நிலம் ஆண்டிடும்
வீரர் அந்நாள் வெற்பிதில் இருந்திரார்.

விசயன்: யாரவன்?

[தூதுவன் ஒருவன் வந்து ஏதோ காதில் சொல்லுதல்]

கனகன்: விசயரே! அவன்என் சொன்னான்?
சேரன் எவனோ திரண்டதோர் படையுடன்
யாரோ ஒருத்தியாம் அவள்பெயர் கண்ணகியாம்
சிலைஅவட் கெடுக்கத் தெற்கில் இருந்தே
இலைகல் என்றே இமயம் நோக்கி
புலியென வருவனாம்! பணிந்தால் போரிலை!
இலையெனில் இமயம் இருப்பிடம் இலையாம்!

கனகன்: ஆணவக் காரன்! ஆணவப் பேச்சு!
பூணூல் அணிந்தவர் போரினை எங்கே
ஏற்றிடப் போவார் என்றவன் நினைத்தான்!
காற்றாய் அவன்படை கலங்குதல் உண்மை!
எய்! எய்! ஆடல் எதுக்கடி போ! போ!
போய்! மறை! முன்னால் போதும் ஆட்டம்.
விசயரே! பார்ப்போம் வீணரை ஒருகை!
அமைச்சர் எங்கே?

விசயன்: அமைச்சரே! உடனே
படைகளைக் கிளப்புக! பார்ப்போம்! வெல்வோம்!

3

[வஞ்சிமாநகர் விடுத்துச் சேரன் செங்குட்டுவன் நீலகிரி வந்து பாடிவீடு அமைத்துத் தங்கியிருத்தல்]

வில்லவன்கோதை: வில்தலைக் கொண்ட வேந்தர்க் கரசே!
பல்யாண்டு வாழி! பல்யாண்டு வாழி!
வடதிசை ஏகப் படையுடன் வந்தஇப்
படையினை எதிர்க்கப் பாரில் எவருளார்?
முன்னம் நின்னை மூண்டு படையுடன்
தன்வலி தெரியா தயல்வலி எதிர்த்த
"வடஆ ரியரொடு வாள்வலி கொண்டதைக்
கடுங்கண் கூற்றம் கண்விழித்துக் கண்டது!
கங்கைப் பேர்யாற்றுக் கடும்புனல் நீத்தம்
எங்கோ மகளை ஆட்டிய அந்நாள்
ஆரிய மன்னர் ஈரைஞ் ஞூற்றுவர்க்கு
ஒருநீ ஆகிய செருவெங் கோலம்
அறிந்தவர் எதிர்த்திடார்! அஃதறி யாரிலை!"

அழும்பில்வேள்: மன்னவா! ஆடல் மகளிர் வந்துளார்
அன்னவர் தம்மை ஆடச் சொல்லவா?

சேரன்: அழும்பில்! அவரை ஆடச் சொல்லுக!
விழுப்புண் வேண்டும் வீரர்க் கெல்லாம்
சற்றது மகிழ்ச்சியைத் தந்து நிற்கும்!
(ஆட்டம் முடிந்தவுடன்)

சேரன்: அழும்பில் வேளே! அவர்கட் கெல்லாம்
செழும்ப முத்தும், திகட்டப் பொன்னும்,
அள்ளிக் கொடுத்து அவரைப் பேணுக!
(தூதுவன் ஒருவன் வந்து வில்லவன் கோதையின் காதில் ஏதோ சில சொல்லுதல்)

வில்லவன்: (வியப்புடன்)
எள்ளியா நகைத்தனர்? என்ன? என்ன?

தூதுவன்: ஆமாம் தளபதி!

சேரன்: (நெற்றியைச் சுழித்து நிமிர்ந்த பார்வையுடன்)
அவனுரை என்ன?
வில்லவா அதனை விளக்கிக் கூறு!

வில்லவன்: சொல்லநா துடிக்கும்! சொல்லவா தோன்றலே?
கனகனும் விசயனும் காவல நம்முடை
இனத்தையே பழித்தாராம்! இமயம் தன்னைத்
தமிழர் வென்றது தாமிலாச் செய்கையாம்!
அமைந்தஇவர் அரசியல் அமையா நாளில்
எதிர்த்துத் தமிழர் இமையம் வென்றராம்.
எதிர்த்தே இமையம் இன்றெவர் வரினும்
தூளாம்! தூளாம்! சொல்லிதைச் சொன்னாராம்!

சேரன்: (சினம் மிக்கவனாய்ச் சிவந்த கண்களுடன்)
ஆ அ! கா! அவ்வள வாணவம் அந்த
ஆ அரியப் பேடியர்க் கமைந்தா விட்டது?
கூறிய அவர்நா கொட்டும் குருதியாய்
மண்ணில் விழவிலே! மற்றிதைச் சொன்னோர்
இமையம் இருப்பினென்? ஈழமே இருப்பினென்?
அங்கம் பலவும் அவருடல் சரியாய்ப்
பங்கமிலா திருத்தலால் பாவமென் செய்வர்?
"ஆடியல் யானையும் தேரும் மாவும்"
பீடுகெழு மறவரும் பிறவும் கூட்டி
ஓங்கிய இமயம் ஓர்கொடி அடைவீர்!
போங்கள்! போங்கள்! போர்ப்பறை கொட்டுக

(நாடுபல வென்று கங்கைக்கரையில் பாடி வீடு அமைத்துச் சேரன் செங்குட்டுவன் அமர்ந்திருத்தல்)

சேரன்: வில்லவா!
வில்லவன்: வேந்தே! வேண்டுவ தென்னை?
சேரன்: எல்லோரும் உன்கையில் எப்படிச் சிக்கினர்?
போரில் உன் திறம் போற்றற்குரியது
கூரிய உன்வேல் கூற்றம்! கூற்றம்!
எத்தனை துண்டம்! எத்தனை தலைகள்!
செத்தவை எல்லாம் தீட்டிய உன் வாள்
தந்த பரிசிலே சுவைத்தது போலும்.
எந்தாய் தமக்காய் இங்கு நாம் முன்பு
வந்தது இல்லையா? வானினைப் பார்! அதில்
சந்திரன் சிரிக்கும் தகைமையோ எள்ளல்.
ஒருபகல் கூட உன்னோ டெதிர்த்துப்
பொருவதற் காற்றாப் போர்த்திறம் கொண்டஇக்
கனகனும் விசயனும் காவலில் உளரோ?

வில்லவன்: "வாய்வாள் ஆண்மையின் வண்தமிழ் இகழ்ந்த
காய்வேல் தடக்கைக் கனகனும் விசயனும்
ஐம்பத் திருவர் கடுந்தே ராளரொடு
சடைமுடி உடையுடன் சாம்பல் பூச்சுடன்
பீடிகை பீலிப் பெருநோன் பாளர்
பாடும் பாணியர் பல்லியத் தோளினர்
ஆடு கூத்தர் ஆன உருவுடன்"
ஏந்துவாள் ஒழிய இருப்பிடம் விட்டு
தாந்தாம் தப்பித் தலையது பிழைத்தால்
போதும் என்று புறப்பட் டோடக்
கண்டநம் வீரர் கண்ட உடனே
தண்டனை இன்றித் தப்பவா ஒப்புவர்?
கைது செய்தனர்! காவலில் வைத்துளேன்.
இமையக் கோட்டில் ஏற்றதோர் கல்லைச்
செதுக்கியும் முடிந்தது! தென்னவா உமது
ஆணை கிடைத்தால் நாளையே நமது
சேனைகள் எல்லாம் தெற்கு நோக்கி
ஏகுதற் கியலும்! இங்குநாம் வந்த
தாகம் தணிந்தது! இனிநாம் தங்கிட
வேண்டுவ தில்லை! வீரர்கள் எல்லாம்
ஆண்டுள மனைவி அழகுடை மக்கள்
நினைப்பில் உள்ளனர்! நினைவுதான் என்னவோ?
அனைவரும் ஏற்றிட அதற்குச் சம்மதம்.

சேரன்: வில்லவா! (புன்முறுவலுடன்)
எனக்கு வீரர்கள் நினைப்புச்
சொல்லியா அறிவேன்? தொடர்ந்தே இனி நாம்
நாளையே நமது நாட்டை நோக்கித்
தோளைத் திருப்புவோம்! ஓ! ஓ! சொல நான்
மறந்தே போனேன்! மன்னவர் அவரைச்
சிறைவிடுத் தந்தச் செதுக்கிய கல்லை
அவர்தம் தலையில் ஏற்றியே அவரைத்
தெற்கு நோக்கிச் செலுத்துக! அதுவே
கற்புக் கண்ணகிக்குக் காவலர் அவர்செய்
பணியாய் ஆகும்! பைந்தமிழ்ப் பாவை
படிமம் தூக்கின் பழியும் மறையும்!
போ! போ! "தண்டனை" புதுவிதம் செல்! செல்!

சனி நீராடு

(புலவர். இரா. இளங்குமரன். மு. மு. உயர்பள்ளி)
திருப்பரங்குன்றம்.

'சனிநீராடு' என்னும் ஒரு தொடரை ஔவையார் ஆத்திசூடியிலே தந்துள்ளார். இத்தொடருக்கு, "சனிக்கிழமைதோறும் எண்ணெய் தேய்த்து நீரில் முழுகு" என்று பொருள் கூறப்பட்டு வருகின்றது. "இது 'சரியா?" என்பதைத் தெளிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

'சனிநீராடு' என்னும் தொடர், பொதுவாக நீராடுதலைப்பற்றிக் குறிக்கின்றதே அன்றி, எண்ணெய் தேய்த்துக் குளித்தல் பற்றிக் குறிப்பிடவில்லை. நீராடுதல், எண்ணெய் தேய்த்துக் குளித்தலாக மட்டும் ஆகாது. ஆனல், சனிக்கிழமை எண்ணெய் தேய்த்துக் குளிக்கும் பழக்கம் பெருக்கமாக ஆடவரிடத் தற்காலம் உள்ளமையால் அக்குறிப்பு ஒன்றேறே கருத்தில் கொண்டு 'சனி' என்பதற்குச் சனிக்கிழமை என்றே பொருள் கூறிவிட்டனர். இது தவரும்.

ஆடவர் எண்ணெய் தேய்த்துக் குளிப்பது சனிக்கிழமையில் மட்டுமன்று. புதன்கிழமையிலும் எண்ணெய் நீராடும் வழக்கம் உண்டு. இவ்விரண்டு கிழமைகளும் எண்ணெய் நீராடுதற்கு உரியனவாக இருக்க, ஔவையார் சனிக்கிழமை ஒன்றையே கூறினர் என்பது சாலாது. அன்றியும் பெண்டிர்குலப் பெருமூதாட்டியான அவர், தங்கூட்டத்தவர் எண்ணெய் நீராடும் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளை அறவே மறந்து, ஆடவர்க்குரியனவற்றுள்ளும் சனிக்கிழமை ஒன்றையே குறிப்பிட்டார் என்பதும் பொருந்தாது.

சனி என்பது கிழமைக்கு ஆயின் ஆடவர் குளிப்பதற்குரிய கிழமைகள் இவை என்றும், பெண்டிர் குளிப்பதற்குரிய கிழமைகள் இவையென்றும் குறிப்பிட்டே தீரல் வேண்டும். இவ்வாறு காட்டாது, ஒரு நாளைமட்டும் கூறி 'வாளா' விட்டுவிடுவது தக்கதுஅன்று. இத்தகைய 'குறிப்பு மொழி'யினை 'இளைஞர்' மீது சுமத்துவதும் ஔவையார்க்கு இயல்பு அன்று. அன்றியும், நாள்தோறும் செய்தே ஆக வேண்டிய நல்ல செயலுக்கு நாள் குறித்துக் காட்ட'வேண்டிய தேவை இல்லை. நாள் குறிப்பிட்டுரைப்பின், பிற நாட்களில் நீராடவேண்டாம் என்பது பொருளா? சனி, சனிக்கிழமை ஆக்கப்பெற்றமையால் ஏற்பட்ட தவறே இது. இத்தவறு நீராடலை 'எண்ணெய் நீராட்டு' என்னும் அளவுக்

கும் வலிந்து இழுத்துச்சென்று விட்டது. இவ்வாறு உரை கூறும் வழக்கமும் பழக்கமாகிவிட்டது. ஆனால் உண்மைப் பொருள்தான் என்ன?

நோயர்: சிறுவர், முதியர் ஆகியோர் வெந்நீரில் குளிப்பது நலம் என்றும், உடல் வலுவுடைய மற்றையோர் எல்லாம் தண்ணீரில் குளிப்பதே தகவு என்றும் இன்றைய ஆய்வியல் அறிஞர் எடுத்துரைக்கின்றனர். தண்ணீரிலேயே நீராடுமாறும் வற்புறுத்துகின்றனர். இக்கருத்தினையே ஔவையாரும் சனிநீராடு என்னும் தொடரால் வற்புறுத்தியுள்ளார்.

குளம், கேணி இவற்றின் நீர் தூயதாகவே தோன்றினாலும்கூட, கட்டுக்கிடைப்பட்டுக் கிடக்கும் காரணத்தால் தூயது ஆகாது. நீர் குளிர்ச்சியாக இருந்தால் மட்டும் போதாது. தூய்மையுடையதாக இருத்தலும் இன்றியமையாததே. ஆற்றுநீர் ஓட்டம் உடையதாயினும் பலவகைப் பொருள்களையும் இழுத்துக்கொண்டு வருமாற்றால் அதுவும் தூயதன்மையை இழக்கின்றது. ஆனால் ஊற்றுநீர் ஓட்டம் இத்தகு குறைபாடு ஒன்றும் பெறாததாக இருப்பதுடன் அளவே குளிர்ச்சியும் தூய்மையும் ஒருங்கே பெற்றதாகவும் இருக்கின்றது. அதனால் ஊற்று நீரில் குளித்தலே பெருகிய நலமும், முறுகிய இன்பமும் தருவதாகும். இது குறித்தே ஔவையார் 'சனிநீர் ஆடு' என்றார். சனிநீரில்-ஊற்றுநீரில் (தூய குளிர் நீரில்) - குளி என்பது பொருளாம்.

ஊற்று நீரில் குளிப்பது பண்டுதொட்டு நிகழ்ந்துவரும் பெரு வழக்கமாம். "ஆற்றுப் பெருக்கு அற்று அடிசுடும் அந்நாளும் அவ்வாறு, ஊற்றுப்பெருக்கால் உலகு ஊட்டும்" என்று ஔவையார் நல்வழியில் கூறியமை நினைவு கூர்தற்கு உரியதாம். சில பல் திங்கள் அளவும் ஓடி வற்றும் ஆற்றைப்போலாது, என்றென்றும் தோண்டுவார் தோண்டும் அளவுக்கு நீர் சுரந்து உதவும் பெருமைக்குரியது ஊற்றேயாகும். இம்மாறுவளம் கருதி 'ஊற்று நீரில் குளி' என்று ஏவினார் போலும். குளித்தல் ஆண்டாண்டு தோறும், நாளெல்லாம் செய்யவேண்டிய நற்கடமையல்லவா!

பண்டுதொட்டே தமிழகத்தில் கடல் நீராடும் வழக்கம் உண்டு. உப்பு மல்கிய கடல்நீரிலே ஆடி அமைந்தால் 'பிசுபிசுப்பும், உப்புப் படலமும் உடலில் தோன்றும். இது

குறித்தே, கடல் நீராடினோர், கடலுக்கு அண்மையான மணற் பரப்பிலே ஊற்றுத்தோண்டி அந்நீரில் மீண்டும் குளித்தல் வேண்டும் என்னும் வழக்காற்றை ஏற்படுத்தினர். இதனை, ''கடல் பெரிது-மண்ணீரும் ஆகாது அதனருகே சிற்றூறல், உண்ணீரும் ஆகிவிடும்'' என்னும் ஒளவையாரின் மூதுரையே தெளிவுபடுத்தும். இப்பாடல் கடல் நீர் மண்ணுதற்கும் (குளித்தற்கும்) ஆகாது என்றும், ஊற்று நீர் மண்ணுதலுடன் உண்ணுதற்கும் ஆகும் என்றும் தெளிவாக்குதல் அறியத் தக்கதாம்.

மேலும், ஒளவையார் 'அனந்தல் ஆடேல்' என்றும், 'நீர் விளையாடேல்' என்றும் இரு தொடர்களை ஆத்திசூடியில் வழங்குகின்றனர். அனந்தல் ஆடேல் என்பதற்கு 'கடலில் நீந்திக் குளியாதே' என்றும், நீர்விளையாடேல் என்பதற்கு 'வெள்ளத்தில் நீந்திக் குளியாதே' என்றும் பொருள் கூறுவர். இவ்வாறு அச்சந்தருவதும் தூய்மையற்றதும் ஆகிய கடல் நீரையும், ஆற்று நீரையும் விலக்கிக்கூறும் ஒளவையார், அச்சமற்றதும் நலம் பயப்பதுமான 'ஊற்று நீரில் குளி என்று ஏவுவதே பொருந்தும். குளித்ததற்குத் தகுதியல்லாத இடங்களைச் சுட்டியுரைக்கும் ஒளவை தக்க இடத்தைச் சுட்டிக் காட்டுதலே முறை, அதை விடுத்து நாளைக் குறிப்பிட்டார் என்றால் அவர் கருத்துக்கு அரண் பட்ட செயலாகாது; முரண் பட்ட செயலாகவே முடியும்.

சனி நீர், ஊற்று நீராக ஆடல் என்ற சொல்லின் பொருளென்ன என்பதை அறிய வேண்டிய அவசியமும் ஏற்படுகின்றது. நீராடல், உரையாடல், விளையாடல், கொண்டாடல், திண்டாடல் முதலாய சொற்கள் தனித் தனியே தரும் பொருளினை ஆடல் என்னும் பொதுச் சொல்லால் வழங்குவது அடிப்பட்டுவரும் வழக்கமாகும். இதனாலேயே ஆடல், ஆடுதல், ஆகிய சொற்களுக்கு உரை கூறும் பொழுது குளித்தல், அசைதல், கூத்து, செய்தல், சொல்லுதல், பொருதல், புணர்தல் முதலாய பொருள்களைத் தந்துள்ளனர். ஆடல், குளித்தல் ஆகின்றமையாலும், சனி நீர், ஊற்று நீர் ஆகின்றமையாலும் 'சனி நீராடு' என்னும் இச்சொற்றொடர்க்கு 'ஊற்று நீரில் குளி' என்பதே பொருளாகும் என அறியலாம்.

தரவு கொச்சகம்

அ லை ம க ள்

(பதிகன்)

1. விண்ணெங்கும் ஒளிபரப்பி வியந்துயிர்கள் வளம்பெறவே
கண்ணொளியும் உண்பொருளும் காலங்கள் அறுவகையும்
வெண்பகலும் தண்ணிரவும் விதித்தபடி யருளிவரும்
எண்ணில்லாக் கதிருடையோன் என்தந்தை எல்லவனே

2. நிலமகளின் உயிர்த்தோழி நீலவண்ணத் திருவுடையாள்
கலனாவான் முத்திற்கும் கணக்கிலாவெண் சங்கிற்கும்
உலகோரின் உணவிற்கே உகந்தசுவை இனிதளித்து
அலர்மகளாய் அருள்புரியும் அன்னையவள் அலைகடலே

3. என்னருமை யன்னையவள் எழில்பொங்கும் அலைகளுடன்
இன்பமுடன் விளையாடி இனிதிருந்தேன் மஞ்சுருவில்
விண்மீனின் ஒளிகண்டு வியந்ததையும் பிடித்திடவே
விண்ணோக்கி நான்பறந்தேன் வீணெனப்பின் அருந்தேனே.

4. கார்முகிலாய்ப் பறந்துலகக் காட்சிகளைக் கண்டுவர
ஊர்சுற்றிக் கான்சுற்றி உவகையுடன் விரிந்துசென்றேன்
ஓர்மலையின் பசுமைநிறம் அன்னைதனை நினைவூட்ட
ஆர்வமிகும் ஆவலுடன் அதையணுகி அணைத்தேனே.

5. பேதைமையை யுடனுணர்ந்து பிழையறிந்தே னங்கெனினும்
காதலின்பக் கடல்கண்டேன் கரையேற மனமில்லை
ஆதரித்த அன்னையவள் அலைமோதித் தவிக்கின்றாள்
காதலியே நீசென்று கண்டுவாவென் றுரைத்தனரே.

6. மனமசோர்ந்தேன் உடல்மெலிந்தேன் மண்ணுலகில் நீரானேன்
மனங்கவர்ந்த காதலன்சொல் வழுவாது நதியாகி
வனமென்றும் ஊரென்றும் மண்ணென்றும் கல்லென்றும்
கணப்பொழுதும் நில்லாது கடல்நோக்கி வரைந்தேனே.

7. எனைக்கண்ட அன்னையவள் இமிழ்திரையாம் நீள்கரத்தால்,
அணைத்தெனையே ஆழ்த்திவிட்டாள் அன்பாழி இன்பமதில்
வினைப்பயனாய் உனைப்பிரிந்தேன் விளையாட்டாய்க் காதலித்தேன்
நினைத்தாலும் இனிக்குதென்றேன் நெஞ்சுதுடி துடித்திடவே.

8. எனதன்னை கூறிடுவாள் எவர்நிலையும் அதுவேதான்
மனமொத்த ஈருயிர்கள் வழுவாது காதல்கொளின்
தினம்வளரும் அவரின்பம், தீவினையால் ஓருயிரை
அனந்தனருள் பிரித்துவிடின் அவர்துன்பம் அளப்பரிதே.

9. என்னருமை மகளேநீ எதற்காக ஏங்குகின்றாய்
உன்நிலைக்கு வருந்தாதே உளங்கொண்ட காதலனைச்
சென்றடைக உரிமையுடன்! சென்றாலும் எனைமறவேல்
அன்னையென்று நாடிவந்தால் அளித்திடுவேன் அன்பமுதே,

10. நிலவுலகில் உயிர்களெலாம் நிலையற்ற உடலொழித்துப்
பலவேறும் உருவெடுத்துப் பரமனருள் பெறுவதுபோல்
பலவுருவில் நீதோன்றிப் பயின்றிடுக அன்பு வாழ்(வு)
உலகோரின் நலம்வேண்டி உன்காதல் ஓங்குகவே!

நும் நீயிர்

ஆ. சிவலிங்கனார்
(தமிழ்விரிவுரையாளர், சி. பா. சு. தமிழ்க்கல்லூரி, மயிலம்.)

(311-ஆம் பக்கத்தொடர்ச்சி)

(நும்+கை—நு+கை—நுங்+கை=நுங்கை). அடுத்து 'நும்' என்பது வேற்றுமைப் புணர்ச்சியில் அவ்வாறும் எனின் அல்வழிப் புணர்ச்சியில் எவ்வாறும் என்ற கேள்வியைத் தாமே கொண்டு, "அல்லதன் மருங்கின்" என்ற நூற்பாவைக் கூறினார், அஃதாவது நும் என்பது நீயிர் எனத் திரிந்து பின்னர், 'வருமொழி வல்லெழுத்தாயின் இயல்பாகும்' என்று கூறினார் (நீயிர்+குறியீர்=நீயிர்குறியீர்.)

இவ்விடத்தும் ஒரு வினா எழலாம். நீயிர் என்பது ரகர வீறுதலின் ரகரவீறு கூறியவிடத்தில் கூறியிருக்கலாம்; நும்மின் திரிபென்றுகூறி மகரவீறு போலக்கொண்டு கூறுவது ஏன்? என்று வினவலாம். தன்மை, படர்க்கைப் பெயர்களின் இயல்புநிலையும் வேற்றுமை யுருபேற்றவழி யாகும் திரிபுநிலையும் ஆங்காங்கே கூறிவிட்டார். "தான் யான் என்னும் ஆயீரிறுதியும் (எழுத். 193) என்னும் நூற்பாவில் 'தான், யான்' என்பன 'தன்' 'என்' எனத்திரியும் என்றும் "தாம் நாம்" என்னும் மகரவிறுதி" (எழுத். 189) என்னும் நூற்பாவில் 'தாம்' 'நாம்' என்பன 'தம்', 'நம்' எனத் திரியும் என்றும் கூறினார். முன்னிலை ஒருமை 'நீ' என்பது 'நின்' எனத் திரியும் என்றும் கூறிவிட்டார். ஆனால் அவை கூறியவிடங்களில் 'நீயிர்' என்னும் முன்னிலைப் பன்மை 'நும்' எனத் திரியும் என்று கூறவில்லை.

அதனால் புள்ளிமயங்கியலில் 'அம்' என்ற மகரவீறு பற்றிக் கூற நேர்ந்தபோது; 'அஃது எதன் திரிபு' என்று கூற நினைத்தார் ஆசிரியர். எடுத்துக்கொண்டு பேசப்படுவது நும் ஆதலின் அதையே நிலைமொழியாகக் கொண்டு அஃது அல்வழிப் புணர்ச்சியில் எவ்வாறுகும் என்றும் கூற நினைத்

தார். அதனால் அந்த நும் என்பது முன்னைய உருவமாகிய நீயிர் என்று மாறியே அல்வழிப்புணர்ச்சியாகும் என்றும் கூற நினைத்தார். அதனால் நும் என்பதை நீயிர் எனத் திரித்தார். இவ்வளவில் கொள்வதே பொருத்தம்.

ஆசிரியர் தாம் கூறவந்த சொல்லிலக்கணங்களை ஒரே முறையில் ஒழுங்குபடுத்திச் சொன்னார் என்று கூறிவிட முடியாது. ஒரு சொல் பற்றியே நினைவுக்கு வந்தபோதெல் லாம் அவ்வவ்விடத்துக்கேற்பச் சொல்லிச் சென்றார் என்றே கொள்ளவேண்டும். இங்கிலையில், தான் யான் முதலியன தன், என் முதலியவாகத் திரியும் என்று கூறிய உருபியலிலேயே நும் என்பதும் நீயிர் என்றாகும் என்று கூறிவிடாமல் புள்ளிமயங்கியலில் கூறினார்.

என்வே ஆசிரியர், முதலில் 'நும்' என்பது வேற் றுமைப்புணர்ச்சியில் வருமொழி வல்லெழுத்தோடு சேரும்போது (மகரம் கெட்டு) வல்லெழுத்தின் இன வெழுத்து மிகுந்து முடியும் என்று கூறிய பின்னர், அதுவே அல்வழிப் புணர்ச்சியில் எப்படி வரும் என்பதை மனதிற் கொண்டு கூறவந்தபோது, 'நும்' என்பது 'நீயிர்' எனத் திரிந்து வருமொழி வல்லெழுத்தோடு (இயல்பாகச்) சேரும் என்று கூறினார்; என்று கொள் வதே சிறக்கும். இப்படிக் கூறிய விடங்களும் எழுத்ததி காரத்தில் உண்டு. உதாரணமாக ஒன்று காண்போம்.

'பத்து' என்ற எண்ணுப்பெயர் நிலைமொழியாக நின்று 'ஒன்று' முதலிய எண்ணுப் பெயர்கள் வருமொழி களாகவரின் எவ்வாறு சேரும் என்று (எழுத். 433) முத லில் ஓர் இலக்கணம் அமைத்தார். அடுத்து ஒன்று முத லியன நிலைமொழியாக இருக்கப் 'பத்து' என்பது வரு மொழியாகவரின் எவ்வாறாகும் (எழுத். 438) என்பது பற்றி இலக்கணம் அமைத்தார். இரண்டாவதில் 'பத்து என்பது பஃது எனத்திரியும் என்றார், (ஒன்று+பத்து-

ஒன்று+பஃது) இவ்வாறு திரிவது ஒன்று முதல் எட்டு வரையுள்ள எண்கள் நிலைமொழியாக இருக்கும்போதேயாம், 'ஒன்பது' என்னும் எண்ணுப் பெயர் நிலைமொழியாக இருக்கும்போது 'பத்து' என்ற வருமொழி அடியோடு மாறுபடுகிறது- இதைக்கூறவந்த ஆசிரியர் ஒரு மாறுபாடு செய்கிறார்.

'ஒன்று' முதல் 'எட்டு' வரையுள்ள எண்கள் நிலைமொழியாகப் 'பத்து' என்னும் எண் வருமொழியாகவரின் அது 'பஃது' எனத்திரியும் என்ற ஆசிரியர், ஒன்பது என்ற எண்ணின் முன் பத்து என்ற எண் வருமொழியாக வரின் அப்பத்து என்பது எவ்வாறு வரும் என்று இலக்கணம் அமைக்கவேண்டும். (அஃதாவது ஒன்பது + பத்து என்பதில் பத்து எவ்வாறு வரும் என்று கூறவேண்டும்.) அதற்கு மாறாக ஒன்பது என்பதன் முன்னர்ப் 'பஃது' என்பது எவ்வாறாம் என்று இலக்கணம் அமைத்தார்.

ஒன்று முதலிய எண்களின் முன்னர்ப் பத்து என்ற சொல் பஃது எனத்திரிந்தது என்ற ஆசிரியர், ஒன்பது என்ற எண்ணின் முன்னர் மட்டும் பத்து என்பது எவ்வாறு திரியும் என்று சொல்லாமல் பஃது என்பது எவ்வாறு திரியும் என்று சொல்வானேன். ?

ஒன்று முதல் எட்டுவரை நிலைமொழியாக நிறுத்திப் பத்து என்பதை வருமொழியாக வைத்து, அதைப் பஃது எனத்திரித்து வந்த நிலையில், ஆசிரியர்க்குப் பஃது என்ற சொல்லே மனதில் நின்றது. உடனே ஒன்பது என்பதன் முன்னர் (அம்மன நினைவிலேயே) பஃது என்பது வந்ததாகக் கொண்டு இலக்கணம் அமைத்தார். ஒன்பது+பஃது —தொண்ணூறாகும் என்பது அவர் அமைத்தவிலக்கணம்.

இவ்வாறே நும் என்பதை முதலில் வேற்றுமைப் பொருட்புணர்ச்சியில் எவ்வாறு வரும் என்று சொல்லிவிட்டதால் அல்வழியில் அந்த நும் என்பது எவ்வாறு வரும் என்று சொல்ல நினைத்து "அல்லதன் மருங்கின்" என்ற நூற்பாவை அமைத்தார். அந்நிலையிலேயே 'நும்மின்திரிபெயர்' என்று நீயிர் என்பதைப் பின்னரும் குறிப்பிட்டார், இவ்வாறு அமைதி கொள்வதே சிறக்கும்.

கண்டதும் காதலா?

(வித்துவான். வீ. ப. கா. சுந்தரம் M. A., மதுரை.)

(தொடர்பு-பக் 301)

காதல் தூய இயல்பு வாய்ந்தது; தெய்வீகத் தன்மை நிறைந்தது. திருமணம் ஆய்ந்து அறிந்து புரிதற்குரியது. ஒருவர்க்கொருவர் உற்ற துணைவராக, வாழ்க்கை முழுதும் ஒன்றி வாழ்வதால் ஆய்ந்து, ஆண்டவன் காட்டும் அருள் வழியறிந்து தத்தம் துணைவரைத் தேர்ந்துகொள்ளல் வேண்டும். திருமணம் வேடிக்கையுமன்று; விளையாட்டு மன்று; பணம் பெறுவது மன்று; பதவி யுயர்வதுமன்று. திருமணம் என்பது இருவர் இணையாவதும் துணையாவதும் ஆகும். உடல் கலந்து, ஊன்கலந்து, உணர்வுகலந்து, உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பது திருமண வாழ்க்கை. மேலும் அஃது ஆயிரங்காலத்துப் பயிர்; வழிவழி வளர்ந் தோங்கும் வைரமரம். ஆதலால் சிந்தித்துத் தேர்ந்து வாழ்க்கை வழித்துணையைக்கொள்ளல் வேண்டும். ஆழ மறியாமல் காலை விடுத்து அடிக்கும் வெள்ளத்தில் ஆழ்ந்து அழுது, அழிதல் அறிவுடைமையாகாது. ஏதோ கண்ட வுடன் காதல் கொள்ளல் என்பதும் உடல் அழகால் மட்டும் உடனே மயங்கிவிடல் என்பதும் உடற்புணர்ச்சியில் உடனே ஈடுபடல் என்பதும் அறிஞர் கண்ட ஆய்வுநெறியா காது; உலக நடையோடு ஒவ்வியதும் செவ்வியதும் ஆகாது. காதல் ஆய்ந்துகொளற்குரியது என்பதைப் பல் வேறு கோணங்களிலிருந்து காணலாம்.

நட்பினை ஆய்ந்து செய்வது போலவே, காதலையும் ஆய்ந்து செய்தனர் என்பதற்கு இலக்கிய இலக்கணச் சான்

றுகள் பல வுள. காதலும் நட்பும் ஒன்று எனலாம். வள்ளு வர் காதலையே நட்பு என்று குறித்துள்ளார்.

> "உடம்போ டுயிரிடை யென்னமற் றன்ன
> மடந்தையோ டெம்மிடை நட்பு"

என்ற குறளில் காதலரின் உயிர்த் தொடர்பை நட்பு என்று ரைத்தார். "பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே" என்றுரைத்தாள் குறுந்தொகைத் தலைவி. மேலும் ஆடவர் இருவர் கொள்ளும் நட்பினைக் காதல் என்று குறிப்பிடும் வழக்கும் உண்டு.

> "தன்பெயர் கிளக்கும் காலை என்பெயர்
> பேதைச் சோழ னென்னும் சிறந்த
> காதற் கிழமையு முடையன்"

என்று கோப்பெருஞ் சோழன், பிசிராந்தையார் கொண்ட காதலைப் போற்றிப் புகழ்கின்றான்.

எனவே நட்பும்காதலும் பெரிதும் ஒற்றுமையுடையன; வாழ்க்கை இன்பத்தில் சிறப்பான இடம் வகிப்பன. "செயற் கரிய யாவுள நட்பி னதுபோல்" என்று வள்ளுவர் நட்பைச் சிறப்பித்தார். அவ்வாறே பெண்ணிற் பெருந்தக்க யாவுள என்று காதற் சிறப்புணர்த்தினர்.

'நவில் தொறும் நூல் நயம் போலும்' நட்பு நாளும் வளர்ந்துயர்வது என்றார். அவ்வண்ணமே அறிதோறு அறி அறியாமை கண்டாற்' போலக் காதற் களிப்பும் துய்க்குந் தோறும் துளித்துச் செழித்துப் பூத்துக் குலுங்குவது என் றார். ஆயினும் நட்பினும் பேரின்பம் பயப்பது காதல். ஆத லால் தான் அறிதோறும் அறியாமை கண்டற்றால் என்ற உவமையால் விளக்கினர். இறுதியில்லாத, இணையில்லாத, உவட்டாத, தெவிட்டாத இன்பம் பயப்பது காதலுறவு. இத்துணைச் சிறந்த காதலுறவினை நட்பினைக் காட்டிலும் நன்கு ஆய்ந்து கொள்ளல் இன்றியமையாதது.

நட்பினையும் காதலையும் செய்யும்வகையினைக் காண் போம். இருவர் ஒரே இடத்தில் கூடியுறைவதால் நட்பு மல்

ரும். அடிக்கடி ஒருவரை ஒருவர் கண்டு உரையாடிப் பழகு வதாலும் நட்பு மலரும். இவ்விரு வகையில் நட்புறவு மலர் வதைக் காட்டிலும் ஒத்த உணர்ச்சியால் நட்புக் கொள்ளல் உயர்வுடைத்து.

> "புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதான்
> நட்பாங் கிழமை தரும்."

என்று விளக்கினுர். இவ்வாறே உடனுறையாமலும் உரை யாடாமலும் காதற் கிழமை முகிழ்க்கும். அவளின்றி வாழ இயலாது என்ற உணர்வும் பற்றும் ஈர்ப்பும் கவர்வும் தூண்டி, ஒருவனை நெருக்கி ஏவுங்கால் காதல் உணர்வு மிகும். மகளிர்க்கும் அவ்வாறே.

ஒருவனது குணத்தினையும் குடிப்பிறப்பினையும் கண்டு நட்புச் செய்தல் வேண்டும். மேலும் அவனிடம் காணப் படும் குற்றங் குறைகளையும் அறிந்து நட்டல் வேண்டும். அவனுடைய் இனத்தார் குறைவற்றவர் எனத் தெரிந்து நட் டல் வேண்டும். இவ்வாறு வள்ளுவர் நட்பைச் செய்ய வழி வகுத்துக் காட்டினர்.

> "குணனும் குடிமையும் குற்றமும் குன்ற
> இனனும் அறிந்தியாக்க நட்பு."

இதுபோன்றே காதல் கொள்ளும் வழியினையும் தொல் காப்பியர் விரிவாக விளக்கியுள்ளார். "ஒத்த கிழ வனும் கிழத்தியும் காண்ப" என்று காதல் முகிழ்க்கும் முறையைக் குறிப்பிட்டார். கிழவன் என்பது உரிமையுடை யோன் எனும் பொருளது. கிழத்தி என்பது உரிமையுடை யோள் எனும் பொருளது. அறிவு, உருவு, உணர்வு, வயது முதலியவற்றில் ஒற்றுமையுடைமையால், அவனுக்கு அவளே உரியள், அவளுக்கு அவனே உரியன் என்பதை உணர்த்தினுர். பத்து வகையிலே இவர்களுடைய ஒப்புமை யுரியனவாம்.

> பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோடு
> உருவு நிறுத்த காம வாயில்

நிறையே அருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே (மெய்ப். 25)

என்றதால் பத்து வகையில் ஆய்ந்து காதலித்தனர் என்பது போதரும்.

(*1*) பிறப்பு:—நல்ல தாய்தந்தையரிடம் தோன்றிய நிலையே பிறப்பு என்பது.

"தேனின் இறுவென வேனி யிழைத்திருக்கும்
கானக நாடன் மகன்" (கலி. 36)

என்பதாலும்

'கானக் குறவர் மடமகள்' (நற். 102)

என்பதாலும் ஒப்புமை வகையுள் பிறப்பு என்றதை யறியலாகும். எனவே தலைமக்களிடையே காணத்தகும் ஒப்பு வகை பத்தனுள்ளே முதற் கண் தெரிய வேண்டியது இவர் இன்னார் மக்னர், மகளார் என்பதும் குடும்ப நிலையுமாம்,

(2) குடிமை:—குடியின் தன்மை குடிமை. அஃதாவது குடும்பத்தினரின் தன்மை. குடும்பத்தலைவனின் தன்மை யாவது குடும்பத்தைத் தாங்குவதே. குடும்பத்தைத் தாங்குவதற்குரிய இரு பண்புகளைக் குடி செயல் வகை எனும் அதிகாரத்துள் வற்புறுத்துகின்ருர் வள்ளுவர். அவை முயற்சியும் கல்வியறிவுமாம்:—

ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளுங் குடி. (1022)

எனவே முயற்சியும் அறிவும் உடையவரா காதலர் என அறிதல் வேண்டும். இவ்வாறு அறிவது உலகில் இன்றும் உளது.

'வினை முடித்தன்ன இனியோள்' (நற் 3) என்றும்
'செறுநரும் விழையும் செம்மலோன்' (நற் 50) என்றும்
'பிறர்க்கு என முயலும் பேரருள் நெஞ்சினர்' (நற் 186)

என்றும் போற்றுவதால் குண நலன்களை நன்கு ஆய்ந்தே காதலித்தனர் என்பதும் போதரும்,

நாருடை நெஞ்சத்து ஈரம் பொத்தி
ஆன்றோர் செல்நெறி வழாஅச்
சான்றோன் ஆதல் நற்கறிந்தனை தெளிமே (நற் 233)

என்ற பாடலால் களவு மணத்தில் தலைவி, தலைவனை நன்கு அறிந்து தெளிந்தனள் என்பதைத் தெளியலாகும்.

''தோழி, என் தலைவரை நன்கு அறிந்தேன், அவர் சான்றோர் என உணர்ந்தேன்; நம்பினேன்; களவு புரிந்தேன். இப்போது மணம்புரியாமல் அவர் நெடுங்காலம் வந்தொழுகின்றார். நீ, நான் நம்பியது தவறு என்றால், சான்றோரும் குறை செய்வார் என்றால், காதல் வாழ்வில் சாதல் இனிது'' என்று நற்றிணைத்தலைவி தான் ஆய்ந்து காதல்கொண்டதைக் கூறினாள். செய்யுள் வருமாறு:—

நாடல் சான்றோர் நம்புதல் பழிஎனின்
பாடில கலுழும் கண்ணொடு சாஅய்ச்
சாதலும் இனிதே காதலம் தோழி. (நற். 327)

(3) ஆண்மை:— ஆளுந் தன்மையே ஆண்மை எனப்படும். அஃதாவது தீயநெறியில் செல்லாது நற்குண நற்செயலில் தன்னையே அடக்கி ஆளும் தன்மை, இஃது இருபாலார்க்கும் உரியது. பெண்டாட்டி என்பது மனைவியாகிய பெண்ணுக்குரிய தன்மைகளை ஆள்பவள் என்னும் பொருட்டதே அன்றி ஆடவனை வைது அடித்து அடக்கி ஆள்பவளீ எனும் பொருட்டது அன்று. பெண்ணுக்குரிய தன்மைகளை

'அச்சமும் நாணும் மடனும் முந்துறத்த
நிச்சமும் பெண்பாற் குரிய என்ப'

எனும் பா அறிவிக்கும். ஆடவர்க்குரியன பெருந்தன்மையும் அறிவும் (உரனும்) என்பதை. ''பெருமையும் உரனும் ஆடூஉமேன'' எனும் பா அறிவுக்கும். ஆடவன், '' உரன் எனும் தோட்டியால் ஓரைந்தும் காத்து'' அறிவினைச் ''சென்றவிடத்தால் செலவிடாது'' நன்றின் பால் உய்த்தல் வேண்டும். இத்தகு பண்புகளைக் கண்டு ஒருவரை ஒருவர் விரும்பிக் காதலித்தனர், [தொடரும்]

ஒளி நெறி ஆண்டு.

மு. இராமலிங்கனார், பி. ஏ.

1. மூவாமை நல்கும் மூவொளி.

" ஒளி வளர் உயிரே
உயிர் வளர் ஒளியே
ஒளிஉயிர் வளர்தரும் உணர்வே "

உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்; வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப் பெருக்கும் கவிப்பெருக்கும் மேவும்; பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெலாம் விழிபெற்றுப் பதவிகொள்வார்; இதுவே தெள்ளுற்ற தமிழமுதின் சுவை; இதைக்கண்டார் இங்கு அமரர் சிறப்புக் கண்டார் என்ற கவிஞர் கருத்து எதை உணர்த்துகிறது?

உயிரை ஒளி வளர்க்கின்றது. இந்த ஒளி உயிர் ஒளி என வழங்கும். உயிரும் ஒளியை வளர்க்கின்றது. இந்த ஒளிக்கு உள் ஒளி என்று பெயர். உள் ஒளி ஓங்கிட உயிர் ஒளி விளங்கிடும் என்பது வடலூர் ஆண்டவர் வாக்கு. இவ்விருவகை ஒளிக்கும் வழிகாட்ட வல்லதுதான் வெள்ளொளியாகும். இதனை நாம் நிற மாலையில் (Speitrum) காணலாம்.; அதில் காணாத ஒளிப்பகுதிகள் இரண்டும் உண்டு. செம்பகுதி அனல்வடிவானது; (Infra red) பேரலை வடிவினது. புற ஊதாப்பகுதி ஒளி உயர் புதிர்க்கதிர் (X-ray) முதலிய நுண்ணலை வடிவினது. இப்பாகமே அணு ஆற்றலும் உலகொளி (Cosmic ray) யும் உடையது. முன்னது வானொலி, ரேடார் முதலிய நெட்டலையுடைய காணாத ஒளிவடிவினதாகும்.

'அது வளர் அணுவே அணுவார் அதுவே அது அணுவளர் தரும் கூறவே' என்பது இத்தகைய உண்மை பலவற்றையும் திரட்டித்தரும் திரட்டுப்பால் போன்றதாகும். 'என்பே உள்ளுருகக் கலந்து என் உள் இருந்தவனே' எனவும் 'உள்ளோர் உள் ஒளியே எனக்குண்மை உரைத்தவனே' எனவும் ஆண்டவர் அழைப்பதும் 'ஒளியே உத்தமனே!' என்ற விளியின் தெளிவை நல்க வல்லன வல்லவா? எனவே, ஆண்டவர் தொகுத்துச் சுட்டும் மூவாமைதரும் மூன்றொளியும் இவை என உணர்வோம்;—

"(1) உள் ஒளி ஓங்கிட (2) உயிர் ஒளி விளங்கிட
(3) வெள் ஒளி காட்டிய மெய்யருள்கனலே"

2. நிறைமுறை வளர்க்கும் ஒளிநெறி.

"நிறை வளர் முறையே!
முறை வளர் நிறையே!
நிறை முறை வளர் பெரு
நெறியே!"

'குருவளர் நெறியே!
நெறி வளர் குருவே!
குரு நெறி வளர் சிவபதியே!'

என்ற இப்பகுதிகளிலே குரு ஒளி என அமைகின்றது. ஒளி நெறி பெற்று உயிர்கள் தழைக்கின்றன. இதனை 'உலகுயிர்த் திரள் எலாம் ஒளி நெறி பெற்றிட' என்பர் ஆண்டவர். நிறையும் முறையும் இணைந்து ஒன்றி ஒன்றையொன்று வளர்ப்பதுடன் ஒளி நெறி வளர்ப்பது எனவும் உணர்ந்து மகிழலாம்.

வளரும் செடியை ஒளியில் வைக்கின்றோம் அது நன்றாக வளர்கிறது. இருளில் வைத்தால் வெளுத்து வாழ்விழக்கிறது. நிழலில் வைத்த செடி ஒளி நோக்கி வளர்கிறது. எனவே ஒளிநோக்கியே உயிர்கள் எல்லாம் வாழ்கின்றன எனத் தெரிகின்றோம், இவ்வுண்மைகளை எந் நொடியிலும் மறவாமல் இருந்தால் இறவா வரம் பெறலாம். இது சாகாக்கலையின் மறைகளில் ஒன்றாகும்.

3. பொருளும். ஆற்றலும்

இந்த நோக்கத்துடன்தான் ஒளிநெறிஆண்டை வழங்கி வருகின்றோம். ஒளி ஆண்டு வேறு; ஒளி நெறியாண்டு வேறு: ஒளியாண்டு தூரத்தை உணர்த்துகிறது; ஒளிநெறியாண்டு நேரத்தைக் காட்டுகிறது. "அடி சேர் நொடி"யை நெகிழ்ந்துணர வைத்து வாழ்வளிக்கின்றது.

ஒளி ஒரு நொடிக்கு 186284 கல் செல்கின்றது. வேறு எப்பொருளும் இந்த வேகமுடையதன்று. இஃது எதனாலும் மாற்ற இயலாத விரைவாகும். எனவே தொகுதிக் கொள்கையும் (Relativity) பகுதிக்கொள்கையும் (Quantum theory) இந்த உண்மையை நடுநாயகமாக அமைத்துக் கொண்டன. ஒரு நொடிக்கு 186284 கல் ஒளி செல்கிறது: ஒரு பதினைந்து நான்கு நொடித்திரளுக்கு (நிமிடத்திற்கு) 186284 × 60

கல் செல்லும்; ஒரு மணிக்கு $186284 \times 60 \times 60$ கல் செல்லும்; ஒரு நாளைக்கு $186284 \times 60 \times 60 \times 24$ கல் செல்லும்; ஓர் ஆண்டுக்கு $186284 \times 60 \times 60 \times 24 \times 365$ கல் செல்லும். இதுவே ஒளியாண்டு எனப்படும். விண்மீன்களில் பல நூற்றுக்கணக்கான ஒளியாண்டு தூரம் உள்ளன.

ஒளிநெறி யாண்டு ஆற்றலைப் பொருளாக்கவும் பொருளை ஆற்றலாக்கவும் வழிகாட்டும் காலத்தையுணர்த்தும்; முதற்பொருளை உணர்த்தும். நிலம் பொழுதிரண்டின் இயல்பே முதற் பொருள்; நிலையே உரிப்பொருள்: இதற்குத் துணைதரும் பிறஎல்லாம் கருப்பொருள். நீளம் அகலம் உயரம் என்ற மூன்றளவுடைய நிலம் காலத்துடன்கூடி நான்களவுத் தொடர் நிகழ்ச்சியாகும்போதே நிலைவேறு எய்த இயல்கின்றது. காலமும் இடமும் காரணமும் கடந்தநிலையே கடவுள்நிலை. இதையடைவதே ஒளிநெறியாண்டு வழங்குவதன் குறிக்கோள்.

4. ஒளியுடம்பு எய்தல்

1874 சனவரி 30 நடுநாளில் வடலூர் ஆண்டவர் அவர்கள் ஒளியுடம்பு பெற்றார்கள். பொருள் ஒளியாகுமா? ஆம். பொருள் ஒளியாகும்; ஒளி பொருளாகும். இதுவே உயர் அறிவியல் (Higherscience) 16—7—1945ல் ஒரு குறிப்பிட்ட அளவுள்ள பொருள் ஒளியாகவும் வெப்பமாகவும் ஒலியாகவும் மாற்றப்பட்டது. இது புதிய மெக்சிகோவில் நடந்தது. 1942ல் அறிஞர் பெர்மி அணு அரக்கனை அடக்கினார். அணுப்பிளப்பதிலும் இணைவதிலும் ஒளி உண்டாகிறது. நீர்வளியணு 1.008 அணு நிறையுடையது. அத்தகைய இருஅணு கூடினால் $1.008 + 1.008 = 2.016$ என அமையவேண்டும். அப்படியமையாமல் ஒருபகுதி ஒளியாகி விடுவதால் இத்தொகை குறைந்து விடுகிறது. எனவே பொருள் ஒளியாகிறது என்பது அறிவியல் முறைப்படி கணித்தறியப்படுகின்றது. உலகொளிக்கதிர் (Comicray) பொருளாகமாறிய சோதனையும் ஒளிநெறியின் வெற்றிகளில் ஒன்றை வெளியிட்டுள்ளது. இராமன் விளைவு, சீமன் விளைவு, எடிசன் விளைவு, ஐன்சித்தன் விளைவு முதலிய அறிவியல் உண்மைகள் ஒளிநெறியின் வெற்றிகளேயாகும்.

இதைப் பொதுமக்களும் புரிந்துகொள்ளலாம்; கணித மேதைகளும் இனிதுணரலாம். நெய் கட்டியாக

இருக்கிறது. வெயிலில் வைக்கிறோம். உருகுகிறது. இதை விளக்கில் இட்டு ஏற்றுகிறோம். நெய் நீர்நிலை கடந்து ஆவி நிலையடைந்து ஒளிமயமாகிறது. பனிக்கட்டி நீராகிறது; ஆவியாகிறது; ஒளியாகிறது; மேகமாகிறது; மழையாகிறது; திரும்பவும் பனிக்கட்டியாகிறது. இது பொதுமாற்றம். கற்பூரம் நீராகாமலே ஆவியாகிறது; ஒளியாகிறது. இது சிறப்பு மாற்றம். இத்தகைய மாற்றமே ஆண்டவர் ஒளியுடம்பு எய்திய சிறப்பு மாற்றமாகும்.

ஒளி நெறியாண்டைப் பல படிகளாக வழங்கலாம்:—

(1) இன்று 12—1—60; இதை 12—1—86 என வழங்கலாம்;

(2) 31—1—60ஐ 1—1—87என வழங்கலாம்;

(3) அடிசேர் நொடி என்ற அறிவியல் அடிப்படை அளவுகளையுணர்ந்து வாழ்வில் ஆளாக வழிதுறை காணும் படிக் காலமும் இடமும் ஒன்றியே எதையும் கணித்து வழங்கலாம். 'கணக்கறிந்தார் கல்வி கற்றறிந்தாரே' என்பர் திருமூலர். அடிசேர்நாடி (FSS-Foot, seer, second)என்க.

(4) உணவு, உடை, உறைவிடம், உணர்வு எல்லாம் ஒளிமயமாக உறங்கினும் ஒளிவைத்தே உறங்கும் பழக்கமும் பெற ஒளிநெறியாண்டினைப் பயன்படுத்தலாம்.

(5)

ஞாயிறு.	திங்கள்.	செவ்.	புதன்.	வியா.	வெள்.	சனி
1	2	3	4	5	6	7
8	9	10	11	12	13	14
15	16	17	18	19	20	21
22	23	24	25	26	27	28

இவ்வாறு 365÷28 = 13 திங்களும், மீதி 1 அல்லது 2 நாள் (லீப், நான்காண்டுக் கொருமுறை இருநாள்) உடைய 14-வது ஒளிநெறித் திங்கள் உடையதாக அமைவதும் உருவாகும். இதனால் காலம்பற்றிய கணிதச் சிக்கலும் நீங்கி விடும்; புனிதவாழ்வும் உருவாகும்; திங்களின் இயக்கம்

உடல் இயக்கத்தோடு நெருங்கிய தொடர்புடையது என்பதை ஆளான உடலினர் அனைவரும் நன்குணரலாம்.

12 நேரியங்களைக் கொண்டு அனைத்தையும் ஒளி ஒன்று கொள்கை (unified light theory) விளக்கமாகவும் விரித்துணர்த்தலாம். அவற்றுள் ஐந்தாவது நேரியம் (equation) ஆற்றல் = பொருள் × ஒளிவேகம் × ஒளிவேகம் என்பதாகும். சிறந்த பல உண்மைகளை இது தெரிவிக்கும். சுருக்கமாக, ஆ = பொஒ² ($E=MC^2$) என இதனைக் குறிப்பிடுவோம். ஓர் அணுப்பொருள் பேராற்றல்தரவல்லது; பேரொளிதர வல்லது.

ஆற்றலின் வடிவங்கள் அனைத்தும் ஒளியே ஒளிமயமே வேறிலை எல்லாமும்தான் .... சத்தியமே' என வடலூர் ஆண்டவர் வகுத்துரைத்தார்கள்.

ஏனைய நேரியங்களை எல்லாம் தனியே விரித்து 'ஒளி நிலை' என்ற தலைப்பில் விளக்கிக் கூற விடை பெறுகின்றேம். வளர்க ஒளி நெறி! வாழ்க வையகம்!

குறிப்பு:— மேலே குறித்த 14 திங்களுக்கும் முறையே

1. சோதி இராமலிங்கமதி
2. மாணிக்கவாசகர்மதி
3. திருமூலர்மதி
4. அப்பர்மதி
5. தொல்காப்பியர்மதி
6. திருவள்ளுவர்மதி
7. இராமன்மதி
8. ஐன்சித்தனர்மதி
9. மாக்சுபிளாங்குமதி
10. சிமன்மதி
11. எடிசன்மதி
12. நியூட்டன்மதி
13. மாக்சுவெல்மதி
14. மெய்கண்டார்மதி

எனப் பெயர் அமைத்து வழங்கலாம். ஊரமுதுண்டு ஒழியாமல் ஆரமுதுண்டு நீடூழி வாழ்கின்ற அகவினத்தார் இதனை எப்பாரும் எப்பதமும் எங்கணும் சென்று பரப்புவர்.

இராமநாதபுரம்

காலஞ்சென்ற மகாவித்துவான்

திருவனந்தபுரம் பல்கலைக்கழகம் முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்

இராவ்சாகிப் உயர்திரு. மு. இராகவையங்கார்

அவர்களை நினைத்துப் பாடிய

சரம கவி மாலிகை

வெண்பா

நள்ளத்தி யுட்புகுந்து நன்முத்தங் கொண்டுவந்து
பிள்ளைக்கென் றூட்டப் பிரியத்தால் அள்ளிக்கை
முத்தங் கொடுத்தவர்வாய் முத்தங்கொள் நற்பரதர்
நத்திவாழ் நற்பாண்டி நாடு. 1

ஓங்குதெங்கின் மீதே யொருதாவுத் தாவியதில்
வீங்கிளநீ ரைப்பறித்து விட்டெறிந்தே—ஆங்குநிலத்
துள்ள வணிற்கூட்ட மோடியவை யுண்பதுகண்
டுள்ளமகிழ் மந்திநிறை யூர் 2

முகவைப்பேர் வாய்ந்தவந்த முந்தியநல் லூரை
செகமிசைசீ ராமனிசை செப்பும்—புகலரிய
பாவனமாஞ் சேதுவினைப் பண்டைத் தமிழைக்கா
காவலர்கள் சேதுபதி கள். 3

அனையோ ரரசவையி லாஸ்தான வித்வான்
தனையேநேர் நூறவ தானி—முனைதவத்தோன்
முத்துசா மிப்பேர் முழுப்புலமை பெற்றவன்றன்
எத்திசையும் நாட்டிசையோ னே. 4

அன்னோன் றவப்பயனா யான்ற வரும்பொருளாய்த்
தன்னேரி லாத தனிப்பொருளாய்—என்னே
புராதனவிப் பூமியிலே புத்திரனாய்த் தோன்றி
இராகவப்பே ரும்பெற்றா னே. 5

கற்பன வெல்லா மிளமையிலே தான்கற்று
விற்பன னாக விளங்கியே—நற்புலவர்
போற்ற மதுரையுறை சங்கப் புலவனாய்
ஆற்றல்பல காட்டினா னால். 6

'செந்தமிழ்'த் திங்களிதழ் சீர்பெறந டாத்திநின்று
சொந்தப் புலமையினைத் தொல்லுலகம்—விந்தையுறக்
காட்டினான் பாண்டித் துரைபாற் கரன்மெச்ச
ஈட்டினான் மொய்த்தபுக ழே. 7

மோனை யெதுகையணி முந்து முயர்கருத்தோ
டேனைநய மெல்லா மினிதிலங்க—யானையின்
கன்றென் றயிர்க்குங் கவிகூறு மெய்ப்புலவன்
என்றிவனை யேற்றதுல கே. 8

என்றாலுங் காலத் தியல்புக் கியைந்தவிதங்
குன்றா வழகு நிறைகுணத்தாற்—பொன்றாப்
பயனுடைத்தா மிக்க பளபளப்பாத் தீட்டும்
நயனுடைத்தா னல்லவச னம். 9

நாலாய் முறையா னாவலருஞ்சொல் வன்மையினால்
தோலாத வாதத் துணிபினால்—பாலா
அமிழ்தாப் பருகுவோ ரானந்தங் கொள்ளத்
தமிழ்வசனந் தந்தானந் தை. 10

அகராதி மேம்பணியை யாற்றலுடன் செய்து
தகராப் புகழ்க்கோட்டை கட்டி—மிகவே
துரைத்தனத்தார் தோத்திரிக்க ராவ்சாகிப் என்றே
யுரைத்தபட்டங் கொண்டா னுவந்து. 11

ஒன்றே பணியிஃ துலகி லிவன்புரிந்த
தன்றே யவையா யிரமாமால்—நன்றே
உலகறியு மிங்கே யுரைத்திடலும் வேண்டா
நலமகனி வன்றமிழ் நாட்டு. 12

கைம்ம றுவவாமற் கற்றோ ரிவனுலகுக்
கம்மா வரும்பணிக ளாற்றினான்—நம்மால்
இயற்றக்கைம் · மாறொன் றியலாத தாலே
உயர்த்திக்கை நாம் கூப்புவோம். 13

அநந்தமெய்க் கீர்த்திப்பே ராசிரிய னாய்ஸ்ரீ
அநந்தபுரத் தேயமர்ந் தானால்—அநந்தனாம்
எச்சிலையுங் கொள்ளு மிராகவனைப் போலவே
இச்சையுட னிவனா மிங்கு. 14

ஆயிரந் திங்கட் கதிக முலகினின்று
பாயிர மாத்தமிழ்க்குப் பற்பணி—நேயமுடன்
யோகியென நன்றே உஞற்றினான் மற்றிவனை
யோகியென்றே கொள்ளு முலகு 15

நற்றமிழை யம்புவியை நல்லன்பு நேயர்களை
உற்றசுற் றத்தா ருறவினரை—முற்றிலுமே
துக்கத்தி லாழ்த்திவிட்டுத் தூவிண்ணி லேமறைந்தான்
மிக்கவன் பாளனா மே. 16

மறைந்தானென் றெனினைந்திவ் வாறியாஞ் சொன்னோம்
மறைந்தா னிலைநம் மனத்துள்—நிறைந்திருந்தான்
ஆதலி னென்றுமவற் காதரத்தோ டேசாந்தி
ஓதலில் யாம்மகிழு வோம். 17

இசையும் விகாரி மகரத் திருபான்
ஓசையறுசேய் வாரத்தில் வாய்த்த—இசைமலிசேர்
வெண்பாதி யாரும், மூ. ராகவனார் விட்டுணுவின்
ஒண்பாதஞ் சேர்ந்ததிதி : ஓம். 18

சென்னை
11—2—1960,

மின்னா நூருத்தீன்,

அறிக்கை

"செந்தமிழ்"

1. அச்சிடுமிடம்: மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை.

2. வெளியிடும் காலம் திங்கள் தோறும்.

3. அச்சிடுபவரின் பெயர்: தமிழவேள், பி. டி. இராசன், B.A. (Oxen)Bar-at-law, M.L.C.
   இனம்: இந்து.
   முகவரி: மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை.

4. வெளியிடுபவரின் பெயர்: தமிழவேள் பி. டி. இராசன், B.A. (Oxon)Bar-at-law, M.L.C.
   இனம்: இந்து.
   முகவரி: மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை.

5. ஆசிரியரின் பெயர்: தமிழவேள். பி. டி. இராசன், B.A.(Oxon)Bar-at-law M.L.C.
   இனம்: இந்து.
   முகவரி: பாளையம் இல்லம். தல்லாகுளம் (அஞ்சல்) மதுரை.

6. இதழின் உரிமையாளர்களின் பெயர்களும், முகவரியும் அல்லது மேற்படி இதழின் ஒரு சதவிகிதத்திற்கு அதிகமான மூலதனம் போட்டுள்ளவரின் பெயர்களும். முகவரிகளும். } மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை.

பி. டி. இராசனாகிய நான், என் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் நன்கு தெரிந்தமட்டில், மேலேகொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் யாவும் உண்மையானவை என்று அறிவித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம்,
பி. டி. இராசன்,
வெளியிடுபவர்.

மதுரை
14—3—60

மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் நூல்கள்

I. சங்க வெளியீடு

			ரூ.	அ.	ப.
4.	வைத்தியசாரசங்கிரகம்	—	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	—	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றும் பாகம்	—	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை)	—	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	—	0	6	0
13.	கலைசைச்சிலேடை வெண்பா	—	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	—	0	4	0
16.	ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சனம்	—	1	4	0
17.	பன்னூற்றிரட்டு (தொகுப்பு)	—	0	4	0

II. செந்தமிழ் வெளியீடு

1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	—	0	4	0
2.	கணுநூல் (5) இனியது நாற்பது (உரை)	—	0	3	0
4.	புலவராற்றுப்படை	—	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	—	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	—	0	8	0
9.	அநுமான விளக்கம்	—	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	—	0	2	0
12.	பன்னிருபாட்டியல்	—	0	12	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	—	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	—	0	3	0
16.	திருவாரூருலா	—	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	—	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்	—	0	4	0
19.	தேவையுலா	—	0	3	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	—	0	8	0
22.	திருக்கலம்பகமூலமும்உரையும்	—	1	0	0
23.	விக்கிரமசோழனுலா	—	0	8	0
24.	குருமொழி வினு விடை	—	0	1	0
25.	கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை	—	0	2	0
26.	திருத்தணிகைதிருவிருத்தம்	—	0	1	0
27.	மதுரைத் திருப்பணிமாலை	—	0	8	0
30.	ஞானமிர்தக்கட்டளை	—	0	3	0
32.	மநீஷாபஞ்சகம்	—	0	8	0
36.	உவமானசங்கிரகம்	—	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	—	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	—	0	2	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ்	—	0	8	0
41.	பொருட்டொகை நிகண்டு	—	0	6	0
42.	அகராதி நிகண்டு	—	0	12	0
43.	மேகவிடு தூது	—	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	—	0	2	0
45.	தண்டலையார் சதகம்	—	0	4	0
46.	இராமோதந்தம்	—	0	3	0
47.	பழமொழி மூலமும் பழைய உரையும் (2-வது 100)		1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	—	0	6	0
52.	கூடற்புராணம்	—	0	10	0
53.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	—	0	6	0
54.	அரும்பொருள் விளக்க நிகண்டு	—	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும்	—	0	12	0
56.	பாப்பாவினம்	—	0	10	0
57.	மதுரை மும்மணிக்கோவை	—	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	—	0	3	0
59.	கடம்பர் கோயில் உலா	—	0	6	0
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	—	0	6	0
61.	கலைசைக்கோவை	—	0	12	0
62.	பெருந்தொகை	—	5	0	0
63.	சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப்பாமாலை	—	0	5	0
64.	சிராமலைக்கோவை	—	0	12	0
65.	மத்யவியாயோகம்	—	0	2	0
67.	அமிர்தரஞ்ஜநி	—	0	2	0
69.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும்	—	0	8	0
70.	திருச்சிறுபுலியூருலா	—	0	12	0
71.	துணைத்தலைவர் நினைவுமலர்	—	0	10	0

1. சங்கத்தினின்று திங்கள் ஒருமுறை அரிய பெரிய செய்திகளைக் கொண்டு வெளியாகிவரும் இச் "செந்தமிழ்" இதழுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ. 4-50. தனிப்படியின் விலை காசு 50 இதுவரை 54 தொகுதிகள் நிறைவாகி யிருக்கின்றன இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 திங்கட் பகுதிகள் உள்ள பைண்டுசெய்யாத தொகுதி 1 ரூ. 4 விதம் விற்கப்பெறும். வி. பி. கட்டணம் தனிச் செலவு.
2. சங்கப் பதிப்புப் புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற் பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு 3 காசு விதம் கழிவு தள்ளிக்கொடுக்கப்படும்.

இவ்விதழ். மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்காகத் தமிழவேள் திரு. பி. டி. இராசன் (B. A., Bar-at-law, M. L. C.) அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளது.